(2) PANEL CHAIRMEN.

MR. SPEAKER : I have to announce to the House that under Rule 14 (1) of the Madras Legislative Assembly Rules, I have nominated the following six Members of the Assembly to be the Panel of Chairmen :—

1. Srimathi Rajathi Kunchithapatham.
2. Sri J. Matha Gowder.
3. Sri K. R. Sambandam.
4. Sri A. Raghava Reddi.
5. Sri S. Madhavan.
6. Sri A. Swamidhas.

VII.—STATEMENT *re* ANSWER GIVEN TO A SUPPLEMENTARY QUESTION UNDER QUESTION No. 602 ON 24th JULY 1962.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, in reply to a supplementary question put by Sri M. Kalyanasundaram, arising out of the answer given to the Legislative Assembly Starred Question No. 602, the House was informed on 24th July 1962 that the period of repayment of the loan of Rs. 10 lakhs due from Madras Vanaspati Limited was ten years. On further verification, it is observed that the Company has been permitted to repay the balance outstanding against principal and the accrued interest in fifteen annual instalments commencing from 1st April 1961. The Company have already repaid two instalments which fell due on 1st April 1961 and 1st April 1962 respectively and thirteen instalments are still due.

VIII.—GOVERNMENT BILL.

THE MADRAS PAYMENT OF SALARIES AND REMOVAL OF DISQUALIFICATIONS (AMENDMENT) BILL, 1962 (L.A. BILL NO. 15 OF 1962).

MR. SPEAKER : Already the Bill has been moved. Does any hon. Member want to speak?

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த மசோதாவில் அடங்கியிருக்கக் கூடிய விஷயங்களைப் பொறுத்த வரையில் எனக்கு ஆட்சேபணையில்லை. அவற்றை நான் ஆதரிக்கிறேன். சபாநாயகருக்கும், சேர்மேன் போன்றோருக்கும் வைத்திய வசதி, இன்னும் சென்னையில் தங்குவதற்கு வீடு இல்லையென்றால் வீட்டு வசதி எல்லாம் கொடுக்கவேண்டுமென்ற அம்சங்களை நான் ஆட்சேபிக்கவில்லை. நான் பூரணமாக ஆதரிக்கிறேன். ஆனால், **கனம் அங்கத்**தினர்களுக்கு கொடுக்கப்படும் வசதிகள் நம்முடைய ராஜ்யத்தில் மிகவும் குறைவாக இருக்கின்றன. கனம் அங்கத்தினர்களின் சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்றுகூட, சில கனம் அங்கத்தினர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். அது பற்றி திருத்தம் கூடக் கொடுத்திருக்கக்கூடும். ஆனால், அவர்களிடத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, கனம் அங்கத்தினர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு இது சமயம் அல்ல என்பதுதான். நாமெல்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [29th October 1962

லோரும் தியாகம் செய்ய வேண்டும் என்று சற்று முன்னல் நாம் பேசிவிட்டு, இப்பொழுது நம்முடைய சம்பளத்தை உயர்த்திக் கொள்ளவேண்டும் என்ற முறையில் தீர்மானம் கொண்டுவந்தால், அது நாட்டிலே மற்றவர்கள் தியாகம் செய்ய வேண்டும் என்கின்ற உற்சாகத்தைக் குறைக்கும். சிறிது நேரத்திற்கு முன்பு ஒரு கேள்விக்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள் பதில் கூறும் சமயத்தில், 150 ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுகிற அரசாங்க ஊழியர்களுக்கு பஞ்சப் படியை உயர்த்த முடியவில்லை, அதற்கு நிதி நிலை இடந்தரவில்லை என்று கூறினர்கள், அப்படி அரசாங்க ஊழியர்களுக்குக் கூறிவிட்டு, சட்டசபை அங்கத்தினர்களாகிய நமக்கு சம்பளத்தை உயர்த்திக்கொள்வது நியாயமாக இராது என்ற காரணத்தால், நான் அந்த யோசனையை ஆதரிக்கவில்லை.

இதை நான் சொல்லும்போது, தற்போதுள்ள சம்பளம் போதுமானது என்று நான் கருதவில்லை. தங்களுடைய தொகுதிக்கும், தங்களுடைய தொகுதி மக்களுக்கும் முழு நேரமும் வேலை செய்ய வேண்டும் என்று நினைக்கக்கூடிய சட்டசபை அங்கத்தினர்களுக்கு இப்பொழுது கொடுக்கக்கூடிய பணம் போதாது. தொகுதி வேலையைச் செய்வதற்குக் கூட இது போதாது. பெரும் வசதி படைத்தவர்கள், இதைப் பொழுது போக்காக நினைக்கக்கூடியவர்களுக்கு வேண்டுமானல், இந்தப் பணம் அலட்சியமாக இருக்குமே தவிர, சிரத்தையோடு வேலைசெய்யவேண்டும் என்று நினைக்கக் கூடியவர்களுக்கு இப்பொழுது கொடுக்கக்கூடிய வசதிகள் போதாது என்பது என்னுடைய அபிப்பிராயமாகும். கனம் அங்கத்தினர்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்ற கருத்தைக்கூட ஆதிரிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் நான் இருந்தேன். ஆனல், நிலைமை மாறட்டும், சூழ்நிலை மாறட்டும், நிதி நிலை சரியாக இருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறட்டும். அந்தச் சமயத்தில் இதை நானும் சேர்ந்து ஆதரிக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கிடையிலே கனம் அங்கத்தினர்களுக்கு வேண்டிய சில வசதிகளையாவது அதிகரிக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். சட்டசபை அங்கத்தினர்கள் கௌரவமாக பணி புரியவேண்டும். அவர்கள் யாரையும் நம்பியிருக்கக்கூடிய நிலை இருக்கக்கூடாது. அரசாங்க அதிகாரத்திற்குட்பட்ட இடங்களுக்குப் போகும்போதாவது அவர்களுக்கு எந்தவிதமான தொந்தரவும் இருக்கக்கூடாது. ஆஸ்பத்திரி வசதியைப் பொறுத்த வரையில், சட்டசபை அங்கத்தினரும் ஒரு சாதாரண நோயாளி போலவே இருக்கவேண்டும் என்று கூறுவது சரியல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். கனம் அமைச்சர் அவர்கள் கேட்கலாம், 'சாதாரண நோயாளிகளுக்கு மட்டும் நல்ல சலுகை கொடுக்க வேண்டாமா' என்று. சாதாரண நோயாளிக்கு நல்ல வசதி கொடுக்கப்படவேண்டும் என்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. எல்லோரும் ஒரே சமம் என்று நினைத்துவிடவும் முடியாது. குறைந்தபட்சமாக அடிப்படையான சௌகரியங்கள் எல்லோருக்

கும் இருக்கவேண்டும். அந்த அளவுக்கு எல்லோரும் சமமாக இருக்கவேண்டும். ஆனால், அவரவர்கள் செய்யக்கூடிய கடமைக் குத் தக்கபடி ஏற்றத்தாழ்வு எந்த சமுதாயத்திலும் இருக்கும் என்பது எனக்குத் தெரியும். அது இருப்பது சாத்தியம். அதை அறவே போக்கவும் முடியாது. அப்படிப் பார்க்கும்போது, பொது ஜன ஊழியர்களுக்குச் சில வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்த வசதிகளை உத்தேசித்து திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன். சட்டசபை அங்கத்தினர் களுக்கு வைத்திய வசதியாவது சீக்கிரமாக செய்து கொடுக்க வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்கள் திருத்தம் கொடுத் திருக்கிறார்கள். வைத்திய வசதி, கல்வி வசதிகளைச் சட்டசபை அங்கத்தினர்கள் பெறவேண்டும் என்பதற்காக அவர்கள் பெறும் சம்பளம் இது குறித்து கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இது வரவேற்கத்தக்கதுதான். அது மட்டும் போதாது. அதன்படி பார்த்தால், ஜெனரல் வார்டிலேபோய், வைத்திய சிகிச்சைப் பெற்றுக்கொள்ளலாம். நூறு ரூபாய்க்கு அதிகமாக வருமானம் உடையவர்கள் எல்லோரும் கட்டணம் செலுத்தவேண்டியிருக்கும், மருந்துக்குக்கூட கிரயம் கொடுக்கவேண்டியிருக்கும். ஆனால், சட்டசபை அங்கத்தினர்களிடமிருந்து அந்தக் கட்டணங்களை வசூலிக்க மாட்டார்கள். இலவசமாக, பொதுவார்டிலே வேண்டு மானால் இருக்க முடியும். இதுபோன்று வேறு சில வசதிகளும் சலுகைகளும் பெறமுடியும். சட்டசபை அங்கத்தினர் ஒருவர் ஆஸ்பத்திரியில் இருந்தாலும்கூட, அந்த வார்டிலே உள்ள மற்றவர் களுக்கு ஓரளவு தொந்தரவுகூட இருக்கக்கூடும். என்னுடைய அனுபவத்தை வைத்து நான் சொல்லுகிறேன். குறிப்பாக, நான் ஒரு வார்டில் இருந்தால், அங்குள்ள மற்றவர்களுக்குத் பல தொந்தரவுகள் ஏற்படும். இதை உத்தேசித்தாவது சட்டசபை அங்கத்தினர்களுக்குத் தனி இடம் ஏற்படுத்தி, அங்கே தனிப் பட்ட வசதிகளைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நான் சில திருத்தம் கொடுத் திருக்கிறேன்.

சட்டசபை அங்கத்தினர்களுக்குப் போக்குவரத்து வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும். சம்பளத்தை உயர்த்துவதைவிட, சட்டசபை அங்கத் தினர் என்ற முறையில் தங்களுடைய கடமையைச் செய்வதற்கு வேண்டிய வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டு மென்பதை நான் ஆதரிக்க விரும்புகிறேன். போக்குவரத்து வசதி இருக்குமானால், கட்சிப் பிரசாரத்திற்குப் பயன்படலாம் என்றாலும்கூட, தொகுதி வேலையைச் செய்வதற்கும் இன்னும் அரசாங்க அதிகாரிகளைப் பார்ப்பதற்கும், அமைச்சர்களைப் பார்த்து குறைகளை எடுத்துச் சொல்வதற்கும் அதிக வசதி ஏற்படும் என்ற முறையில் போக்குவரத்து வசதி இலவசமாக இருக்கவேண்டும். அரசாங்கப் போக்குவரத்து பஸ்களில் மட்டு

மாவது அந்த வசதியை சட்டசபை அங்கத்தினர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. இதுபோன்ற சலுகைகள் மற்ற ராஜ்யங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதும் கனம் அமைச்சர் அவர்கள் அறிந்ததே. அந்த வசதிகள் கொடுக்கப்படவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும்.

இன்னும் இதுபோன்ற மற்ற வசதிகளும் நம்முடைய ராஜ்ய சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படுவது மிகவும் குறைவாகவே இருக்கின்றன. சில ராஜ்யங்களில் கடிதப் போக்குவரத்து நடத்துவதற்குக்கூட தபால் செலவுக்காக தனி அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அதுபோன்ற வசதிகள் நம் ராஜ்யத்திலும் செய்து கொடுக்கப்பட்டால் அதை நான் வரவேற்பேன். சட்டசபை அங்கத்தினர் என்ற முறையில், கடமையைச் செய்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. பல கடிதங்கள், தந்திகள் சட்டசபை அங்கத்தினர்கள் அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டியிருக்கின்றன. அரசாங்க இலாகாக்களுக்கு எழுதும் கடிதத்திற்குப் பதில் வருவதில் காலதாமதம் இருக்கிறது. ஒரு கடிதத்திற்கு நான்கு கடிதங்கள் எழுதினால்தான் பதில் கிடைக்கிறது. ஒரு வருஷம், ஒன்றரை வருஷம் ஆனாலுங்கூட, பதில் வருவதற்கு தார்க்குச்சி போடவேண்டியுள்ளது. ஆகவே, அதிகக் கடிதங்கள் எழுதவும், தந்திகள் அடிக்கவும் கூட அவசியம் இருக்கிறது. எல்லா அங்கத்தினர்களும் தங்களுடைய சொந்தச் செலவிலே இதைச் செய்வது என்பது சாத்தியம் அல்ல. தபால் செலவுக்காக மாதமொன்றுக்கு குறைந்தபட்சமாக ஏதாவது அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன். இன்னும் என்ன என்ன வசதி செய்து கொடுக்க முடியுமோ அதைச் செய்துகொடுக்க அரசாங்கம் அதிகாரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற முறையில் திருத்தங்கள் பிரேரேபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மசோதாவை ஆலோசனை செய்து நிறைவேற்றவேண்டுமென்று நான் கனம் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன்: கனம் சபாநாயகர் அவர்களே, அங்கத்தினர்களின் சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்ற திருத்தத்தைக் கொடுத்திருப்பவன் நான் தான். 'நாட்டில் இப்பொழுதுள்ள நிலையை உத்தேசித்து அங்கத்தினர்களுடைய சம்பளத்தை உயர்த்தத் தேவை இல்லை' என்று கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய கருத்து என்னவென்றால், இப்பொழுதுள்ள நெருக்கடியை உத்தேசித்து நிரந்தரமாக உள்ள ஒரு விஷயத்தைப் பரிசீலிக்காமல் இருக்க வேண்டாம் என்பதுதான். இப்பொழுதே இதை அமுலுக்குக் கொண்டுவராவிட்டாலும், நெருக்கடி நிலைமை தீர்ந்த பிறகு அமுலுக்குக் கொண்டுவரலாம். இப்பொழுது அதைக் குறித்து பரிசீலனை செய்யலாம். செல்வாக்குள்ளவர்கள், செல்வந்தர்கள்தான் சட்டசபை அங்கத்தினர்களாக வருகிறார்கள் என்று சொல்ல

முடியாது. இன்றைக்குள்ள ஜனநாயக அமைப்பில், பொது மக்களுக்கு ஊழியம் செய்யவேண்டும் என்று பொது மக்களின் பிரதிநிதியாக வரக்கூடியவர்கள் பெரும்பாலும் சாதாரண, அல்லது சற்று கீழ் நிலையில் உள்ளவர்கள் என்றுதான் சொல்ல முடியும். அப்படிப்பட்டவர்களுக்கு இப்பொழுது கொடுக்கப்படும் வருவாய் போதாது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்தக் கருத்தை எதிர்த்தரப்பில் உள்ளவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், கண்டிப்பாக என்னுடைய திருத்தத்தை நான் பிரேரேபிக்கப் போதில்லை.

ஆனால், பொதுவான கருத்தை நான் சொல்கின்றேன். நம்முடைய ராஜ்யத்தில்தான் நாம் அங்கத்தினர்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்று கோருவதாக நினைக்கத் தேவையில்லை. ராஜஸ்தான், ஒரிசா, கேரளா, மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், பஞ்சாப் ஆகிய ராஜ்யங்களில் 200 ரூபாய் சம்பளம் சம்பளம் கொடுக்கிறார்கள். காஷ்மீரில் 300 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். இப்படியெல்லாம் 'ப்ரீஸிடென்ட்ஸ்' இருக்கின்றன. அங்கத்தினர்களுக்கு அதிகப்படிச் சம்பளம் கொடுத்தால் எதிர்க்கட்சியினர் அதைப் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டுவிடுவார்களோ என்று அரசாங்கத்தார் கவலைப்படவோ அஞ்சவோ தேவையில்லை. திருத்தம் கொண்டுவந்தது யார் என்பதை எதிர்க் கட்சியினர் கூடக் கவனிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நாட்டுப் பெண், மாமியார் தகராறு இதில் தேவை இல்லை. ஆளுங் கட்சியிலுள்ளவர் கொண்டுவந்ததை எதிர்க்கட்சியினர் எதிர்க்கவேண்டும் என்ற மனப்பான்மையில் எதிர்க் கட்சியினர் இந்த விஷயத்தை அணுகக் கூடாது. சிறைப் பிரச்னையானது நிரந்தரமான ஒரு பிரச்னை அல்ல . . .

கனம் சபாநாயகர் : இந்த மசோதாவிலோ, திருத்தத்திலோ அங்கத்தினர்களுடைய சம்பளத்தை ரூ. 200 ஆக உயர்த்தவேண்டுமென்று வாசகம் ஏதாவது இருக்கிறதா ? திருத்தம் ஏதாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

SRI V. SANKARAN : I have given notice of an amendment and that has been allowed and I am going to move it, when the clauses are taken up for consideration.

கனம் சபாநாயகர் : உரையைச் சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. வை. சங்கரன் : ஏற்கனவே, ஏழு, எட்டு ராஜ்யங்களில் ரூ. 200 முதல் ரூ. 250 வரையில் அங்கத்தினர்களுடைய சம்பளத்தை உயர்த்தி இருக்கிறார்கள் என்பதற்கு 'ப்ரீஸிடென்ட்ஸ்' இருக்கின்றன. இலவச வைத்திய சம்பந்தமாகவும் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். மந்திரிகளுக்கும் மற்றவர்களுக்கும் கூட இப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்கும்போது, அங்கத்தினர்களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது ? அவர்கள் மட்டும் குறைந்த

வர்களா என்ன? ஏதோ 206 அங்கத்தினர்களுக்கு இலவச வைத்திய வசதி கொடுத்தால் ஒன்றும் குறைந்துவிடாது. நியாயமாகத்தான் இருக்கும். சட்டசபை அங்கத்தினர்கள் பொது மக்களுக்கு நல்ல முறையில் பணியாற்ற வேண்டும் என்ற கருத்து இருககவேண்டும். பொதுமக்களுக்காக அவர்கள் அதிக நேரம் கண் விழித்திருந்து கூட பணியாற்றுகின்றார்கள். அதனால், உடல் நலம் கூடப் பாதிக்கப்படுகிறது. வைத்திய வசதி அவர்களுக்கு ஏற்படுத்தினால்தான், அவர்கள் பொது ஊழியம் செய்ய வசதியாக இருக்கும். ஆகவே, என்னுடைய திருத்தத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், அதைப் பிரேரேபிக்க நான் தயாராயிருக்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் நிலைமையை நன்கு விளக்கியிருக்கிறார்கள். இம் மசோதாவைப் பற்றி பேசும் போது, அடிப்படையில் அங்கத்தினர்களுடைய சம்பளத்தை உயர்த்துவது என்பதுபற்றி எல்லாம் இப்போது எடுத்துக் கொள்வது முறையாகாது என்று சொன்னார்கள். அதுமட்டுமல்ல. நூற்றைம்பது ரூபாய் போதாது, 200 ரூபாய்தான் அவர்கள் வேலையின் மதிப்பு என்று அர்த்தமா? இருநூறு ரூபாய்தான் அவர்கள் வேலைக்குத் தகுதியான சம்பளம் என்பதை ஒருக்காலும் எடுத்துக் கொள்ள முடியாது. குறிப்பிட்ட சில வசதிகளை அளிப்பதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர்களுக்குள்ள வைத்திய வசதிபற்றி நான் ஒரு சில திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதை கனம் அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள். மற்றபடி, வேறு சில வசதிகள் பற்றியும் இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. டெய்லி அலவன்ஸ் 12½ ரூபாயாக இருந்தது இப்பொழுது 15 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அடிப்படையில் சம்பள உயர்வைப்பற்றியெல்லாம் இப்பொழுது எடுத்துக்கொள்ள வேண்டாமென்றுதான் நான் கூறுவேன். இந்த மசோதாவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று மறுபடியும் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1962 (L.A. Bill No. 15 of 1962), be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 4 were put and carried.

Clause 5.

திரு. வை. சங்கரன் : எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எல்லோரும் ஒருமுகமாக ஆதரவை தெரிவிக்காததால் நான் என் திருத்தத்தை பிரேரேபிக்கவில்லை.

Clause 5 was put and carried.

[29th October 1962

Clause 6.

MR. SPEAKER : The question is—

'That clause 6 do stand part of the Bill.'

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move the following amendment :—

For clause 6, substitute the following clause :—

"6. *Amendment of section* 12, *Madras Act XX of* 1951.—After sub-section (2) of section 12 of the principal Act, the following sub-sections shall be added, namely :—

"(3) Every member referred to in sub-section (1) shall, subject to such conditions as may be determined by rules made by the State Government, be entitled to hostel accommodation :

Provided that the charge for such accommodation shall in no case exceed three rupees per day.

(4) Every member referred to in sub-section (1) shall, subject to such conditions and during such period as may be determined by rules made by the State Government, be entitled, free of charge, to accommodation in hospitals maintained by the State Government and also to medical treatment.

(5) The salary referred to in clause (*a*) of sub-section (1) shall not be taken into account for the purpose of calculating the total income of a member under any rule or order relating to grant of educational concession or scholarship or to such other matters as may be specified by rules made by the State Government."

கனம் சபாநாயகர் அவர்களே, முதல் பிரிவு ஹாஸ்டல் அக்காமெடேஷனைப் பொறுத்தது. இப்பொழுது கனம் அங்கத்தினர்கள் 2½ ரூபாய் வாடகை கொடுக்கிறார்கள். இதில் '**The charge shall in no case exceed three rupees per day**' என்று போட்டிருப்பதால் இந்த வாடகையை அதிகப்படுத்துவதாக கனம் அங்கத்தினர்கள் யாரும் எண்ண வேண்டாம். சட்டத்திற்காக இது போடப்பட்டிருக்கிறது. இரண்டரை ரூபாய் கன்ஸெஷனல் ரென்டாக உறுப்பினர்களுக்கு அளிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் மற்றவர்கள் அதிக வாடகை கொடுக்கிறார்கள். ஆனால் அம்மாதிரி குறைந்த வாடகையில் அங்கத்தினர்களுக்கு கொடுப்பதற்கு சட்டத்தில் இடமில்லை என்று அக்கவுண்டன்ட்-ஜெனரல் எடுத்துக் காட்டியிருக்கிறார். ஆகவே தான், இந்த வாடகை என்று சட்டத்தில் குறிப்பிடவேண்டியிருக்கிறது. அங்கத்தினர்களைப் பொறுத்தவரை 2½ ரூபாய்க்கு மேற்படாது என்று கனம் வொர்க்ஸ் மினிஸ்ட்டர் சார்பாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மற்றவர்களுக்கு சிறிது வாடகையை அதிகப்படுத்தலாமா என்ற யோசனை இருக்கிறது. இரண்டாவதாக, வைத்தியவசதி பற்றி பொதுவாக சட்டத்தில் இடம் இருக்கிறது. பின்னர் ரூல்ஸ் போட்டுக்கொள்ளலாம்.

எந்தெந்த வகையில், எந்தெந்த சந்தர்ப்பத்தில், எத்தகைய இலவச வசதிகள் அளிப்பது என்பது மற்றொரு பிரிவு. சம்பளம் ரூபாய் 150 என்று வாங்குவதால், அவர்களுக்கு சம்பள சலுகை இல்லாமலிருக்கிறது. இந்த 150 ரூபாயை சம்பளச் சலுகைக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது என்பது மற்றொன்று. இதைத்தான் நான் பிரேரேபிக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendments :—

After section 12 in the principal Act, insert the following section 12-A :—

" *Free transport by Road Transport Services.*

12-A. Every member shall be provided with one free non-transferable pass of the highest class which shall entitle him to travel by any motor bus run by a State Transport undertaking on any route within the State on which such transport undertaking operates, but nothing contained in this section shall affect the payment of any travelling allowance payable to a member under any other provision of this Act."

New section 12-B.

After section 12 in the principal Act insert the following section 12-B :—

Amenities.

12-B. A member shall be entitled to residential accommodation on such scales and on such conditions and to such free medical and other facilities as may be prescribed by rules or orders.

The amendments were duly seconded.

MR. SPEAKER : The amendment given notice of by hon. Sri V. Sankaran is out of order.

The clause and amendments are before the House for discussion.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்களுக்கும், கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்ததிருக்கக்கூடிய திருத்தங்களுக்கும் வித்தியாசம் நிறைய உண்டு. அவர்கள், வைத்தியவசதி செய்து கொள்வதை ஏற்றுக்கொண்டு திருத்தத்தை ஏற்றுக் கொண்டாலும் கூட, எப்பேர்ப்பட்ட வைத்திய வசதி இருக்கப்போகிறது என்பதுபற்றி நமக்கு தெளிவுபடுத்தவில்லை. எந்த முறையில் அங்கத்தினர்கள் நடத்தப்படுவார்கள்? எம்.எல்.எ. பதவி இருப்பதுவரையில் எந்த அரசாங்க ஆஸ்பத்திரியிலும் வேண்டுமானால் சிகிச்சை பெற லாம் என்று உத்தரவு போடுவார்களா அல்லது சட்டசபைக்கு

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [29th October 1962.

வந்திருக்கும் சமயத்தில். செஷன் இருக்கும்போது, திடீரென்று வியாதி ஏற்பட்டால் அப்பொழுது சிகிச்சை கொடுக்கப்படும் என்பதா? இதையெல்லாம் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவரது திருத்தத்தின் நோக்கம், சட்டசபை அங்கத்தினர் பதவி நீடிக்கிற காலம் வரையில் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் இலவச சிகிச்சை கொடுக்கப்படும் என்பதுதான் அவர்களது நோக்கமாக இருக்குமானால் நான் எனது திருத்தத்தை பிரேரேபிக்க வேண்டிய அவசியமே இராது. அவர்களது பிரசங்கத்தில் அதை தெளிவுபடுத்தவில்லை. குறிப்பிட்ட காலத்தில் செய்யலாம் என்று இருக்கலாம். நான் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக்கொண்டு விதிகள் செய்யும்போது வேண்டியதை செய்யலாம். ஆகவே எனது திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். நான் எனது ஆரம்ப உரையில் சொன்னதுபோல் பஸ் போக்குவரத்தில் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறேன். இன்னும் சில வசதிகள் என்று என் திருத்தத்தில் கூறியிருப்பதின் நோக்கம், எனது ஆரம்ப பிரசங்கத்தில் கூறியதுபோல் தபால் செலவிற்காக வேண்டிய அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டும். மாதம் ஒன்றுக்கு என்று கணக்கு வைத்து ஒவ்வொரு எம்.எல்.ஏ.-யும் எவ்வளவு கடிதங்கள் எழுதினோம், எவ்வளவு தந்தி அனுப்பினோம் என்று கணக்கு கொடுத்தால் குறிப்பிட்ட அளவு தபால் செலவு, ஸ்டேஷனரி போன்றவைகளுக்காக கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் "such other amenities" என்று சேர்த்திருக்கிறேன். வேண்டுமானால் விதிகளில் சேர்த்துக் கொள்ளலாம். எனது திருத்தத்தினால் அதிகச் செலவு அரசாங்கத்திற்கு ஏற்பட்டு விடாது. யார் வேலை செய்கிறார்களோ அவர்கள்தான் பெறுவார்கள். ஆக, மெம்பர்கள் உற்சாகமாக வேலை செய்ய ஊக்கம் அளிக்க இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். அதே சமயத்தில் சப்-கிளாஸ் 4-ல் "during period" என்றிருக்கிறது. கேரளத்திலும், ராஜஸ்தானிலும் "during Session of the Assembly". "at the place of meeting" என்றிருக்கிறது. அஸெம்பிளி கூடும்போது சிக்கு ஏற்பட்டால் இலவச வைத்திய வசதி செய்வது என்றிருக்கிறது. அதேபோல், இதுவும் குறுகிய அடிப்படையில் அமைந்து விடக்கூடாது. அந்த அடிப்படையில், குறுகிய அடிப்படையில் அமைநது விடாமல் இருந்தால் நன்றாகயிருக்கும். அதோடு அவர்கள் "பாமிலிக்கும்" ப்ரொவிஷன் கொடுத்தால் அதில் என்ன தப்பு? அதையும் சேர்த்துக் கொண்டால் நன்றாயிருக்கும். எல்லோருக்கும் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

29th October 1962]

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர் 5.00 p.m.
களே, பணச் செலவைப் பொறுத்த மட்டில் கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்களுடைய திருத்தத்திற்கும் நான் கொடுத்த திருத்தத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லை. அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். அதற்கு அதிக செலவாகாது. பணத்தைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் இதை நிறைவேற்று வதிலே சிரமங்கள் இருக்கின்றன. கஷ்டங்கள் இருக்கின்றன. கனம் உறுப்பினர்களுக்கே இதனால் சில சிக்கல்கள் வரும். எனக்கு அது தான் கவலையளிக்கிறது. இப்போது தபால் செலவு என்று சொன்னால், அதற்கு கணக்கு வைத்துக்கொள்ளவேண்டும். தனிப் பட்டதா, சொந்தமா, அவசரத் தேவையா என்றெல்லாம் வரும். அதனால் தவறு ஏற்படும். அதனால் கெட்ட பெயர் கனம் உறுப் பினர்களுக்கு வரக்கூடாது என்பதுதான் என்னுடைய கவலை. (திரு. மீ. கலியாணசுந்தரம்): தவறு செய்வார்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா?) தங்களை அறியாமலேயே தவறு செய் யலாம். தவறுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதுதான் பஸ் இலவச பாஸ் கொடுப்பது என்பது பிரமாதமில்லை. ஆனால் பஸ் பாஸ் வைத்துக்கொண்டிருந்தால், பஸ்ஸில் இட நெருக்கடியால் இடம் கிடைக்காது. யாருக்கு பிரியாரிடி என்ற பிரச்சனை எழும். கனம் அங்கத்தினர்களுக்கு கொடுத்தால், நிற்கிற சாதாரண பிரயாணிக்கு கொடுக்கக் கூடாதா என்று புகார் வரும். இப்படி யெல்லாம் சிக்கல் வரும் என்பதால், இதை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை. ஹாஸ்டல் அக்காமெடேஷன் பொறுத்த வரையில் எங்கே யாவது நல்ல இடத்தைக் கொடுத்தாக வேண்டும். ஓட்டலிலாவது கொடுத்தாக வேண்டும். இப்போதுள்ள ஹாஸ்டல் வசதி போதாது. சிக்கிரத்திலே தகுதியான ஹாஸ்டல் கட்டுவதற்கு யோசனை இப்போது அரசாங்கத்தில் இருக்கிறது. வைத்திய வசதி யாருக்கு எங்கே கொடுக்கிறது? கனம் அங்கத்தினர்கள் ஊர் எல்லாம் சுற்றிக்கொண்டு வரலாம். அங்கெல்லாம் செய்ய வேண்டும். இப்போது கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள் ராஜஸ்தானில் உள்ளதைப் பற்றிச் சொன்னார்கள். அதுவும் யோசிக்க வேண்டியதுதான். ஆனால் சட்டத்திலே போடவில்லை. பின்னாலே யோசனை பண்ணலாம். உயர்தர வார்டிலேகூட வைத்து சிகிச்சை கொடுக்கலாம். ஆனால் இடம் கிடைப்பதில்லை. இடம் இருக்க வேண்டுமே? ஏ, பி, வார்டிலே இப்போதெல்லாம் இடம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அதுதான் பெரிய தொல்லை. இல்லாவிட்டால் உயர்ந்த வகுப்பிலேகூட வைக்கலாம். இங்கே வருகின்றவர்கள் வியாதியுற்றார்கள் என்றால், அவர்களுக்கு இலவச மாக சென்னையிலே உள்ள ஆஸ்பத்திரிகளிலே நல்ல சவுகரியமான, வசதியான இடம் கொடுப்பது பற்றி யோசனை செய்யலாம். ஆனால், நாம் இதைப்பற்றி விதி நிர்ணயிக்கும்போது, எவ்வாறு செய்யலாம் என்பதை நாம் யோசிக்கலாம். ஆகவே, என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொண்டு கனம் அங்கத்தினருடைய திருத் தத்தை வற்புறுத்த வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

For clause 6, substitute the following clause :—

"6. *Amendment of section* 12, *Madras Act XX of* 1951.—after sub-section (2) of section 12 of the principal Act, the following sub-sections shall be added, namely :—

"(3) Every member referred to in sub-section (1) shall, subject to such conditions as may be determined by rules made by the State Government, be entitled to hostel accommodation :

Provided that the charge for such accommodation shall in no case exceed three rupees per day.

(4) Every member referred to in sub-section (1) shall, subject to such conditions and during such period as may be determined by rules made by the State Government, be entitled, free of charge, to accommodation in hospitals maintained by the State Government and also to medical treatment.

(5) The salary referred to in clause (*a*) of sub-section (1) shall not be taken into account for the purpose of calculating the total income of a member under any rule or order relating to grant of educational concession or scholarship or to such other matters as may be specified by rules made by the State Government.

The amendment was put and carried.

The amendments of Sri M. Kalyanasundaram were by leave withdrawn.

Clause 6, as amended, was put and carried.

Clause 7 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1962 (L.A. Bill No. 15 of 1962) as amended be passed."

MR. SPEAKER : The question is—

"That the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1962 (L.A. Bill No. 15 of 1962) as amended be passed."

The motion was put and carried and the Bill as amended was passed.

5-35 p.m. MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.